மாதர் மனோரஞ்சனி.

எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்.—ஔவையார்.

VOL. 2. | MADRAS: SEPTEMBER 1900. | No. 7.

புத்த. உ. | சென்னபட்டணம், 1900-ஹு செப்டம்பர்-மீ. | இல. எ

புற்புலத்து நெட்டிலிங்மையர் வைபவம்.

(93-ம் பக்கத்தொடர்ச்சி.)

அப்பு.—அப்பா, நெட்டிலிங்கம், நீ தான் வெகுபுத்திமான்; என்னவோ
யோகம் பண்ணுகிறாய் என்று ஜம்பமடித்துக் கொள்ளுகிறா
ண்டு வெள்ளைவேஷ்டி கட்டிக்கொண்டு சேலத்துசோடுபோட்டுக்
ண்டு சடக்சடக் என்று நடக்கிறாய்; நான் கேட்பதற்கு சரியான ப
சொல்; அப்போது நீ கெட்டிக்காரன் தான். இல்லை, இந்த ஊரை பெ
ரியவாள் சம்பாதித்த கிராமம் என்று கட்டிக்கொண்டு அழுகிறோமே
இதைவிட்டு தணற்கால் கிராமத்துக்குகுடிபெயர்த்துக்கொண்டு போய்
விட்டால் என்ன என்று ஐயாவைக் கேட்டேன். அதற்கு நீ என்ன
சொல்லுகிறாய்?

நெட்டிலிங்கம்.—நல்லது நான் பதில் சொல்லுகிறது இருக்கட்டும். ஐயா என்ன சொன்னார். நமக்குள் ஐயா தான் மூத்தவர். அவர் சொன்னதைச்சொல்; அப்புறம் நான் சொல்லுகிறேன்.

அப்பு.—இந்நா! இந்த கிருதுதானே ஆகாது! என்னவோ வள்ளிமலையில் 30 வராகன் சம்பளம்வாங்கிக்கொண்டு அங்கிருக்கும் மலைசர்களை எய்க்கிறாப்போல் எங்களையும் எய்க்கப்பார்க்கிறாயே! ஐயா சொன்னது தெரிந்தேயிருக்கிறது. எங்கு போகிறது. அதை நான் அப்புறம் சொல்லுகிறேன் நீ முதலில் நான் கேட்ட கேள்விக்குப் பதில் சொல். தணற்காலுக்கு ஏன் நாம் குடிபெயர்த்துக்கொண்டு போகக்கூடாது.

நெட்டிலிங்கம்.—அப்பு, இந்த கோபந்தான், உன்னிடத்தில் எப்போதும் மூக்குக்குமேலே நின்றுகொண்டிருக்கிறதை நான் பார்த்திருக்கிறேன். நான் என்ன இப்பொழுது சொல்லிவிட்டேன். ஐயா என்ன சொன்னார் என்று கேட்டேன். இவ்வளவு தானே. நீ ஏன் அதற்கு இல்லாத பேச்செல்லாம் பேசுகிறாய்.

அப்பு.—அதிருக்கட்டும் பிள்ளாய், எனக்கு உன்னைப்போல் அழகாய்ப் பேசத்தெரியாது. நான் உன்போல் உத்தியோகம் பண்ணுகிறேனா. சட்டென்று நான் கேட்டதற்கு பதில் சொல்.

நெட்டிலிங்கம்.—தணற்காலுக்கு ஒருநாளும் போகவே கூடாது.

ஐயா.—பார்த்தாயா! நெட்டிலிங்கம் புத்திமானப்பா! சும்மா தானா ஸர்க்காரில் அவனுக்கு வேலை கொடுத்திருக்கிறார்கள்.

அப்பு.—ஐயா, நீ இப்பொழுது ஒன்றும் பேசக்கூடாது. நீயும் பேசி அவனும் பேசினால் ஒரு காரியமும் பிரயோசனப்படாது. நெட்டிலிங்கம், என்னதான் எண்ணியிருக்கிறான், பார்ப்போமே.

.—குசாலாக நீ வேண்டுமென்கிற மட்டும் விசாரித்துக்கொள். நான் என்வாயைத்திறக்க வில்லை.

—என் தணற்காலுக்கு குடிபெயர்த்துக்கொண்டு போகக்கூடாது, தன் காரணம் கொஞ்சம் சொல்லேன்?

லிங்கம்.—தணற்காலாவது போகவாவது! இது என்னபைத்தியம்! முதல் முதலில் தணற்காலில் நமக்கு வீடுவாங்கப்பணம் ஏது? அதவாபணம் தான் கடன்வாங்கி வீடுவாங்கினோம், அங்கு இரண்டு காசு கையில் வைத்துக்கொண்டல்லவோ குடித்தனம் செய்யவேண்டும்! புற்புலமாகுமோ தணற்கால். இங்கு தச்சன் குளத்துக்கு ஸ்நானத்துக்குப் போய்விட்டு வரும்போது வழியில் மர்க்கடத்தோப்பில் புகுந்து ஒரு சருவக்கட்டைஎடுத்து வரலாம்; நாலு நாளைக்கு அடுப்புக்கு உதவும்; தணற்காலில் என்ன பண்ணுகிறது; வாயிலில் இரண்டுமுந்திரிக்குச்சியைவைத்துக்கட்டி "விறகு வாங்கவில்லையோ விறகு' என்று ஒருத்தி விற்பாள். "விலை என்ன" என்றால், பணம் ஒன்றரை என்பாள். அது ஒரு சமையலுக்குக்கூட கட்டாது. சாயந்திரம் சந்தியாவந்தனத்துக்கு* ஊருணிபோனால் அகத்துக்குவேண்டியமாங்காய்அடித்துவரலாம்; கேட்பாரில்லை. தணற்காலில் ஒரு மாவடுபறித்தால் கையை வாங்கிவிடுவான். புற்புலம் ஏழைக்குத் தகுந்த ஊரு; தணற்காலோ குபேரன் பட்டணம். அங்காவது போகவாவது!

அப்பு.—அப்படி என்றால் தணற்காலையே இனி நினைக்காதே என்கிறாயா என்ன!

நெட்டிலிங்கம்.—நான் ஒருநாளும் அப்படிச்சொல்லவில்லை. நாம் தணற்காலில்போய் குடியிருக்கவேண்டியதுதான், புற்புலத்தையும் விட்டுவிடக்கூடாது.

---

* ஊருணி = ஊருக்கடுத்தகுளம்.

அப்பு.—இதென்னடாது, பொடிவைத்துப் பேசுகிறாய்! நீ சொல்வது ஒன்றும் புலப்படவில்லையே!

நெட்டிலிங்கம்.—கேள், அப்பு, கேளுங்கள் ஐயா, நாமோ தரித்திராள். வக்கமையர் வம்சத்தில் பிறந்த ரோசம்மட்டிலிருக்கிறதேயல்லாமல் கையில் ஒருகாசில்லை. காசில்லாமல் பணக்கார பந்துக்கள் மத்தியில் வாசம்பண்ணுவதைவிட காட்டில் காய்கிழங்குகள் தின்றுகொண்டு நாய் நரிகளோடு வாசம்பண்ணுவது மேன்மை என்று சொல்லப்பட்டிருக்கிறது. தணற்காலில் நமது தாயாதிகளைப்போல நாமும் மச்சுவீடுகட்டிக்கொண்டு நமது பெண்சாதி பிள்ளைகளுக்கு நகை பண்ணிப்போட யோக்யதை யிருக்கவேண்டும், தணற்கால் போகவேண்டும். ஒன்றுமில்லை என்று அங்கு போவது மானபங்கம். அவ்விடம்போய் நமது பணக்காரதாயாதிகளிடம் சலம் நெல் இரந்து சீவிப்பதைக்காட்டிலும் புற்புலத்தில் தச்சன் குளத்துத்தீர்த்தத்தைக்குடித்து கருப்புடையானிடம் கம்பு வாங்கி காய்ச்சிக்குடித்து வாழலாம். தணற்காலாவது தணற்கால்! கெட்டுப்போன ஊரல்லவா! ஆயிரந்தான் நாம் ஏழைகளாயினும் நமது புற்புலத்துக் கொப்பாமா தணற்கால்.

அப்பு.—அடே நெட்டிலிங்கம் நீ கெட்டிக்காரன் கெட்டிக்காரன் தான்! ஐயா ஆயிரஞ்சொன்னான், பணக்காரதாயாதிகளிடம் கலநெல் இரந்து ஜீவிப்பதைவிட கருப்புடையானிடத்தில் கம்புவாங்கி ஜீவிக்கலாம் என்றுநீஒரே பேச்சில் சொல்லிக்காட்டியபடி இதுவரையில் ஒருவரும் சொல்லவில்லை. அது வெகு சரி.

நெட்டிலிங்கம்.—அதுமாத்திரமில்லை அப்பு, தணற்கால் தலைகொழுத்த கிராமம்! அங்கு எந்த குடியானவன் நம்முடையசொல் கேட்பான்! அடே என்றால்போ பாப்பான் உன்னால் ஒருகாசுகூடகொடுக்க விதியில்லை! அடேயாம்! தோசையாம்! என்று தூக்கி எறிந்து பேசிவிட்டுப் போவான். புற்புலத்திலோ நம்மைவிட பணக்காரனாயிருக்கும் உடையான்கள் நாம் அடே என்றால் நம்மஐயர் என்று 1,000 பெயர்கைகட்டி நிற்பார்கள். அன்றியும் நமது முன்னோர்கள் நல்ல ஸ்திதியும் நாமிருக்கும் கஷ்டதசையும் உடையான்களுக்குத் தெரியும். ஐயோ! நம்மூர் ஐயமார்கள் இப்படிப் போய்விட்டார்களே! என்று மனதிரங்கி பயந்து நடப்பார்கள். நம்மிடத்தில் ஒரு விசுவாசமும், பச்சாத்தாபமும், அவர்களுக்கு உண்டு. இவ்வளவெல்லாம் நமக்கு இங்கு இருக்க இவைகளை விட்டு நாம் தணற்காலுக்குப் போகவாவது.

அப்பு.—இந்தக்காரணமும் நீ சொல்வது சரி. என்னவோ, நம்ம அக்கிரகாரம் தினம் பாழாய்க்கொண்டு வருகிறதே, தணற்கால் போனாலாவது நமக்கு நல்லகாலம் வராதா. இந்தக்காலமும் தசையும் இப்படியே நிற்குமா என்று சொன்னேனப்பா.

நெட்டிலிங்கம்.—அது சரிதான் அப்பு; நீ சொன்னதில் நான் ஒன்றும் குற்றங் கண்டுபிடிக்கவில்லை; நீ சொல்லுகிறபடியே எனக்குந்தான் ஒவ்வொரு வேளையில் தோற்றுகிறது; ஆனால் உப்புப்போட்டு தின்ற சோற்றின் உணக்கை பாதிக்கிறதே, நான்குகாசு கையில் வைத்துக் கொண்டல்லவோ அதைப்பற்றி யோசிக்கவேண்டும். அப்படித்தான் போனாலும், இந்த ஊரை விட்டுவிடலாமோ. நமது முன்னோர்கள் தேடிய கிராமமாயிற்றே. நம்மை எல்லாம் புற்புலத்து மண்ணாலல்லவோ பண்ணியிருக்கிறது. அப்படியிருக்க இந்த ஊரைவிட்டு அயலூர் போவதில் என்னலாபம். அது நமக்கு அவமானமல்லவா. தணற்கால் நேற்றுண்டான கிராமம், புற்புலமோ நமது பாட்டனார் கொழுப்பாட்டனார் காலம்முதல் பரம்பரையாய் வந்த கிராமம். தணற்காலாரைப்போல் நமக்கு இரண்டு காசும் நகையும் ஈசுவரன் கொடுக்காவிடினும் நாம் எந்த விஷயத்தில் அவர்களுக்குக் கீழ்ப்படிந்தோம். நமது ஊர் தர்சன்குளத்தின்கரையில் நாம் பறிக்கும் கலவங்கீரைக்குக் கட்டுமோ, தணற்கால் சக்கரைப்பொங்கல். அந்த ஊர்ச் செல்வமும் அப்படித்தான், எல்லாம் மேல்பகட்டு. இரண்டு வெள்ளை வேஷ்டி மேல்போட்டு கையில் தடி பிடித்து அரைஞாண்கயிற்றில் கொத்துசாவியாட தணற்காலார் வெளிவருகிறதைக் கண்டு நீ மயங்கவேண்டாம். நமக்கோ கடனுமில்லை, முதலுமில்லை. தணற்காலார்களுக்கோ முதலின் கர்வத்தால் நித்தியம் வியாச்சியம், வியவகாரம். தகப்பனும் பிள்ளையும், அண்ணனும், தம்பியும், பணத்தின் நிமித்தம் சண்டையிட்டு சூஸாத்திரத்தின்பேரில் ஸர்வவிதத்வேஷமும் கொள்ளுகிறார்கள். அப்படித் துர்வினியோகமாகும் பணம் என்னத்திற்கு. பணம் நமக்குக்கிடைத்து நாம் குடுமியைப் பிடித்துக்கொண்டு சந்தியில் நிற்பதைக்காட்டிலும் இம்மாதிரி பணமில்லாமல் சல்லோ புல்லோ என்று வாழ்வதே நலம். ஆனால் நாமும் அப்படி ஆவானேன் என்று கேட்பாயானால், அதற்கு நான் என்னசொல்லுகிறது, இப்போது நாம் சரசமாய் அண்ணன் தம்பி மரியாதையாயிருக்கிறோம். நாளைப் பணங்கிடைத்தால் எப்படியோ, நாமே இன்று இவ்வளவுதூரம் குழைந்து குழைந்து பேசிவிட்டு நாளை மண்டை உடைத்துக்கொள்வோம். பணம் பொல்லாது. தணற்காலார் பணம் முக்காலே மூன்றுவீசமும் இவ்

விதசண்டையிலேயே போய்விட்டது. அவனவன் கணக்குப்பார்த்தால் எல்லாம் நமது நிலமைக்குத்தான் கிட்டத்தட்ட வந்துசேரும்.

அப்பு.—அடா, நெட்டிலிங்கம், நீ நெட்டிக்காரன், கெட்டிக்காரன்தான்! இன்று முதல் தணற்கால் குடிப்போவது என்ற பேச்சை விட்டுவிட்டேன்." அங்குபோய் உப்பில்லை, புளியில்லை, என்று அன்னியர் அயலார்களிடம் கேட்டு வெட்கப்படுவதைக்காட்டிலும், இங்கு நமது கஷ்டத்துக்குத்தக்கபடி கஞ்சியோ, கூழோகுடித்து வாழ்வது நலம். நல்லது நீயும் இத்தனைநாள் உத்தியோகம் பண்ணுகிறாயே; ஏதோ வருஷத்தில் ஆயிரம் ரூபாயாவது மிருந்திருக்காதா, உனக்கு சம்பளம் நூறு. மேல் வருமானம் நூறு ஆவது இருக்காதா. நீயாவது ஏன் நமதுகுடும்பத்தில் ஒருவனைத் தலை எடுத்து தணற்காலில்போய் வாழக்கூடாது? எங்களுக்குத்தான் வருஷத்தில் 3 மாதம் வயல்கொடுத்தது. அப்புறம் 9 மாதம் சுவாமி கொடுக்கவேண்டுமென்றிருக்கிறது. உன்கதி அப்படியில்லையே. நீ ஏன் போகவில்லை?

நெட்டிலிங்கம்.—நானிது வரையில் சொன்னதிலிருந்து நீ ஊகித்துக்கொள்ளக் கூடாதா? சீரகவல்லி ஜில்லாவிலேயே புற்புலத்துக்குப் பிறகு தான் மற்றகிராமங்கள். இங்கு ஆள்கட்டும், குடியானவன் கள்விசுவாசமும் தீர்வைக் கம்மியும், நீர்வளமும், நில்வளமும், காட்டின் அனுபவமும், தேகத்தின் ஆரோக்யமும் எவ்வளவு உண்டோ அவ்வளவு ஓரிடத்திலும்கிடையாது. புற்புலம்ஓர் ஆச்சிரமம். என் காலமும் ஆய்விட்டது, உடையான்களுக்கெல்லாம் அப்போதைக்கப்போது நானும் கொஞ்சம்பணம் கொடுத்திருக்கிறேன். இவைகளைக் கொண்டு கொஞ்சம் நிலம் வாங்கி நமது முன்னோர்கள் பெயரை கொஞ்சமாவது நிலைநிறுத்தி அப்புறமல்லவோ நமக்கு ஆயுள்கெட்டியாயிருந்தால், தணற்கால்போய் நாம் கொஞ்சமேனும் கீழ்ப்பட்டவனல்லவென்று அங்கிருப்பவர்களுக்கு சரிசமானமாய் வாழவேண்டும்என்றிருக்கிறேன் என்று சொல்லிக்கொண்டு மூன்றுபெயர்களும் தம் தம் மனை சேர்ந்தார்கள்.

இந்த நெட்டிலிங்கம் என்பவன் யார்? இவன் உத்தியோகமாவதென்ன, ? புற்புலத்திலிவனுக்கு இவ்வளவு அபிமானம் என்ன? இவைகளை அடுத்த அத்தியாயத்தில் தீர விசாரிப்போம்.

மாதர் மித்திரன்.

உயர்ந்த கல்வியினால் வரும்பெருமையும் அற்பகல்வியினால் வரும் சிறுமையும்.

(120-வது பக்கத்தொடர்ச்சி.)

பாட்டி—ஜானகி! எப்பொழுது வந்தார்களடி இவர்களெல்லாம்?

ஜா:—பாட்டி, பிறகு சொல்லுகிறேன், கதை ரசமாயிருக்கிறது, மத்தியில் ஒன்றும் பேசவேண்டாம்.

பா:—அப்படியா! இரசத்தையும் குழம்பையும் நீதான் கண்டாய், கமலம்; நீ இப்படிவா? ஜானகி ஏணிவைத்து ஏறப்போகிறவள். நம்மையெல்லாம் கல்லிலும் முள்ளிலும் இழுத்துக்கொண்டு போகட்டும், குழந்தையும் வந்தாளா, வா அம்மா.

கம:—பாட்டீ, நான் நேற்றே வந்தேன், வந்ததுமுதல் ஜானகி இவ்விடம் வரும்படி தொந்தரவு செய்தாள், ஆதலால் வந்தேன்.

பா:---நல்லகாரியம் வரத்தானே வேண்டும், உட்காரு, என்னசமையல், அவாளாத்தில்.

கம:—என்னமோ, கச்சாம்பிச்சானென்று ஐந்தாறுவிதம் சமைத்திருந்தார்கள். 10-மணிக்குள் சாப்பிடாவிட்டால் எனக்கு உடம்புக்காகிறதில்லை.

பாட்டி.—பழையது சாப்பிடமாட்டாயோ?

கம:—ஐயோ! எந்தக்காலமோ ஆச்சுது நான் பழையது சாப்பிட்டு, குழந்தை சந்திரகாந்தம்கூட சாப்பிடமாட்டாள். அதுகளெல்லாம் உடம்புக்காகாது, காப்பிதான் காலையில் எழுந்திருந்ததும் ஒருதவலை வைக்கவேண்டும்.

பா:—இந்தக்காலத்தில் எல்லாரும் பெண்டுகள் பசங்களைப் படிக்க வைத்திருக்கிறார்களே, உன் பெண்ணும் படிப்பாளா?

கம:—என்னமோ, நம்மநாளில் நமக்குத் தெரியாதா? எலலாக் குழந்தைகளும் பள்ளிக்கூடம்போய் படித்துவருகிறார்களே, சந்திரகாந்தமும் நன்றாய்த்தான் படிப்பாள். உங்கள் வீட்டில் சமையல் சாப்பாடாய் பத்துகூட தேய்த்தாய்விட்டதுபோல் காண்கிறது, புராணம் தினம் நடக்குமோ?

பா:—காரியமென்ன, பத்துநாழிகைக்கெல்லாம் பொங்கித் தின்றுவிட்டால் பிறகு என்னவேலே. உரத்தவார்த்தை சொல்வதற்குண்டா, அறுபது நாழிகையும் இந்தக் கூட்டம்தான் எங்கள் வீட்டில், பொழுது புகுந்தால் வெடிய வெடிய விளக்குத்தான்.

கம:—சந்திரகாந்தம், இமையவல்லி சொல்வதற்கெல்லாம் அர்த்தம் உனக்குத் தெரிகிறதா?

சந்:—தெரியாமலென்ன, எல்லாம் தெரிகிறது, என்ன அதிசயம், எல்லாம் இரண்டாம்பாடத்தில் வருகிற அர்த்தம்தானே.

கம:—பாட்டியைநோக்கி எங்கள் குழந்தை எல்லாப் பாட்டுந்தான் படிப்பாள், ஆனல் இப்படி பத்துப்பெயரில் சொல்லமாட்டாள், மனதிற்குள் எல்லாம் தெரிந்திருப்பினும் காட்டிக்கொள்ளவுமாட்டாள்.

பாலாம்பாள்:—எங்கள் தமக்கை பெண் நாகப்பட்டணத்திலிருக்கிருளே, படிப்பாள். ஆனல் ஒகோவென்று இப்படிக்கெல்லாம் வராது, சாதாரணந்தான்.

பாட்டி:—நான் சொல்வதைக்கேள், கமலம் தெரிந்தமட்டில் எல்லாருந்தானே பத்து புருஷர்கள் முன்னுல் படித்து வெளிக்குக் காட்டிக்கொள்வார்களா, வென்ன! ஆனல் அதைச்சொன்னல் நவாபு நாளேயகிழம் இதற்கென்ன தெரியுமென்று நேற்றுக் காலமே பிறந்ததுகளெல்லாம் எடுப்பெடுக்கும். ஒன்றைச் சொல்லுவானேன், ஒன்பது வாங்கிக்கொள்வானேன். நான் வாயும் திறப்பதில்லே, கண்ணும் விழிப்பதில்லே.

காமாட்சி:—படிப்பென்றமட்டிலென்ன, அளவுக்கு மிஞ்சினல் அமிர்தமும் தெகட்டும். எவ்வளவு மிதமோ அவ்வளவு படித்தால்தான் அழகு. அதிகமாய்ப் படித்ததினுலேயே அதுவுந்தான் நன்ருயிருக்கிறதா என்ன, என்னேக்கூடத்தான், அறுபதுநாழிசையும் புஸ்தகமும் கையுமாயிருக்கிருளே, மாமியார் வீட்டுக்குப்போனல் பெற்றவர்களுக்கு பெயரும், வளர்த்தவர்களுக்கு வார்த்தையுமல்லாமல் அடக்கவொடுக்கம் வரப்போகிறதாவென்று எல்லாரும் சொல்வார்கள். இப்போதும் அப்படியேவாயிருக்கிறேன், அதற்கதற்குக் காலமில்லேயா?

விஜயவல்லி:—இல்லாவிட்டாலென்ன, சாதாரணமாய் எழுதப் படிக்கத் தெரிந்துகொண்டு பாட்டுப் புஸ்தகம்படிக்கவும், வீட்டில் வேலேயுமில்லாமல் பேசவும், ஒருவருமில்லாத சமயத்தில் எதையாவது வைத்துப் பார்க்கவும் தெரியவேண்டுமெல்லாது வேறென்ன, நம்மூரில்தான் இந்த அதிசயம், இந்தக் காலத்தில் படிப்பவர்களெல்லாம் புருடர்களுக்கு அர்த்தம் சொல்லுகிருர்களாவென்ன.

பார்வதி:—இந்தக்கதை முடியும்வரையில் இவர்களும் பேசுவார்கள்போலிருக்கிறதே. பேசுபவர்கள் சற்று விலகியாவது போகக்கூடாதா? நானும் புராணங் கேட்டேனென்று இவ்விடம் எதற்காக வரவேண்டும்?

ஜா:—அம்மா, அதை என் கேட்கிறீர்கள், பத்துப்பெயர் அதிக சாரசமாய் கேட்டுக்கொண்டிருக்கிறார்களேயென்றாவது நினைக்கிறார்களா! இன்று கதை இருந்த உருக்கத்தில் பேசக்கூட மனம் செல்லுமா? கண்ணப்பர் புராணமும் முடிந்தது, அவர்கள் புராணமும் முடிந்தது, அதைச் சொல்லி பயனென்ன, ஆதிமுதல் கரம்பேறியதைத் திருத்தல் அவ்வளவு இலேசான காரியமா?

இலட்சுமி:—அதென்னமோ, அம்மா எனக்கு ஒன்றும் தெரியாதென்றாலும் இப்பேர்க்சொற்ற புண்ணியகதைகளை இமயவல்லி புகலும்போதெல்லாம் மெய்மறந்த ஆனந்தமடைகிறேன். தவிரவும் நாம் இத்தகைய கல்வி கற்கவில்லையே யென்று வருத்தமுமடைகிறேன்.

பார்:—நம்மைப்போலொத்தவர்களை திருத்துவது சுலபம். அதோ பார், சந்திரகாந்தம் படிப்பைப்பற்றி அவள் தாயார் கொண்டாடுவது இவ்வள வவ்வளவல்ல. அந்தப் பெண் நடப்பதே ஒருவித நெட்டாயிருக்கிறது. ஒருவருடன் முகங்கொடுத்துப் பேசுவதைக்காணோம். இமையவல்லியைப் பார்த்தாவது கற்றுக்கொள்ளக்கூடாதா!

இலட்சுமி:—இமயவல்லியென்றால், நிறைந்தகுடம். குறைக்குடமா கூத்தாட, மேலும், நன்மார்க்கமான படிப்பு படித்தவள்; பிறகு இமையவல்லியினிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு எல்லாரும் அவரவரிடம் சென்றார்கள். ஜானகியும் தன்னுடன் வந்தவர்களை அழைத்துக்கொண்டு போகும்பொழுது கமலத்தை நோக்கி அம்மா! புராணம் ஏதாவது காதில் விழுந்ததா? இமையவல்லியின் படிப்பு எவ்விதமாயிருக்கிறதென்றாள்.

கம:—என்னமோ பத்துப்பெயரில் படிக்கத் தாட்டிவந்திருக்கிறது. குழந்தைக்கும் இதெல்லாம் நன்றாய் தெரிகிறதாம். படிப்பது போவது எப்படியிருந்தாலு மிருக்கட்டும். அறியாதுகளை எல்லாம் ஞானவிஷயமான படிப்பில் போடக்கூடாது. அதில் மிகவும் கெடுதியிருக்கிறது. சமுசாரத்தில் ஆசையில்லாமல் போனாலும் போய்விடும் என்றனள். இதைக்கேட்ட ஜானகி அடக்கக்கூடாத நகைப்பை யடைந்தவளாய் இவர்கள் அவிவேகத்துக்கு வருந்தி அவர்களுடன் வீடுபோய்ச்சேர்ந்தாள். (இன்னும்வரும்.)

ருக்மணியம்மாள்.

பெருந்திருவாம்பிகை.

(116-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

அதுகேட்ட அரசன், "நம்முடைய போக்கிலேயே போவதென்பது சரியல்ல. இவர்கள் நம்மை மணம்புரியச் சொல்லுகிறார்கள். இவர்கள் யார்! நம்முடைய பிரஜைகள், இருக்கட்டும். சொல்லுகிறவர்கள் யாராக இருந்தாலும் என்ன! அவர்கள் சொல்லின் பயனையே நாம் கவனிக்க வேண்டுவது "எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு" என்றார் நாயனார். அன்றியும் இவர்கள் கூறும் விஷயமோ நியாயமானதாகவும் இருக்கின்றது. ஆதலால் நாம் இவர்கள் வார்த்தைக் கிசைவதே முறை" எனத்தீர்மானித்துக்கொண்டு அக்குடிகளை நோக்கி "அன்பர்காள்! உங்கள் விருப்பத்தின் படியே நான் விரைவில் விவாகம் புரிநதுகொள்வேன். இனி நீங்கள் அது விஷயமாகக் கவலைப்படவேண்டாம்" என்றுரைத்தான். அதுகேட்ட குடிகள்: "ஐய, தங்கள் அந்தஸ்துக்கேற்ற அரிவையரைத்தேர்ந்து விவாகத்தை விரைந்து முடிக்கும் அவா அடியேங்களுக்கு மிகுதியும் இருக்கின்றது. ஆதலால் இவ்வூழியம் புரிய அடியேங்களுக்கு அனுமதித்து ஆதரிக்கவேண்டுகின்றோம்" என்றார்கள். அதற்கரசன் "அன்பர்களே, உங்கள் அபிமானத்திற்காக நான் பெரிதும் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன். ஆனால் கன்னிகையைத் தேடும்விஷயத்தில் உங்களைச் செலுத்துதற்குமட்டும் எனக்கு மனமில்லை—உங்களுக்கு அதற்குத்தக்க யோக்கியதை இல்லை என்று கருதி யான் இவ்வாறு சொல்லுவதாக நீங்கள் ஒருபோதும் கருதாதீர்கள். கன்னிகையைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளும் விஷயத்தில் ஒவ்வொருவரும் தத்தமக்குத் தாம்தாமே பார்த்துத் தேர்ந்துகொள்ளுவதுதான் விசேஷம் என்பது என் கருத்து. நீங்கள் தேர்ந்தெடுக்கும் மாது ஒருவேளை என் சுபாவத்திற் கொத்தவளாக இராமற்போக நேர்ந்தால் பின் நான் உங்களைத்தானே நோகவேண்டிவரும். ஆதலால் கன்னிகையைத் தேடும்விஷயத்தை என்னிடத்திலேயே விட்டுவிடுங்கள். ஆனால் ஒன்று, நான் தேடும் மாது யாராக இருந்தாலும் நீங்கள் கௌரவிப்பதாக இருந்தால்மட்டும் நான் அவ்விஷயத்தில் பிரவர்த்திப்பேன்" என்றான். அதற்குக் குடிகள், "ஐய அம்மாது யாராக இருந்தால் என்ன? தாங்கள் தேர்ந்து தங்களுக்கு மனைவியாராகக் கைக்கொண்டால் அந்த க்ஷணமே அவர் எங்களுக்கெல்லாம் தாய் ஆகிவிடுகின்றதில்லையா! தாயை அடிபணியத் தரையவர் பின் வாங்குவார்களா? தங்கள் விவாகமகோற்சவத்தைத் தரிசிக்கும் பாக்கியத்தைச் சீக்கிரம் பெறுமாறு அனுக்கிரகிக்கவேண்டுமென்பதே அடியேங்கள்

பிரார்த்தனை" என்றார்கள். அதற்கு அரசன், "அன்பர்களே விவாகம் விரைவில் முடியவேண்டும் என்பதுபற்றிக் கவலைப்படவேண்டாம், இதென்னமாதம்; பங்குனிமாதம்; இன்றைக்குத்தேதி இருபத்தாறு அல்லவா? அடுத்தமாதம் சித்திரை; அது விவாகத்துக்கு ஏற்றமாதந்தான், சரி, சித்திரை பதினைந்தாந்தேதி காலை பத்துமணிக்கு வேளை நன்றாக இருக்கின்றது, அந்த லக்னத்திலேயே முகூர்த்தம் நடத்திவிடலாம், நீங்கள் அதற்கு வேண்டிய காரியங்களைச் செய்யுங்கள்" என்றான். அதுகேட்ட குடிகள் அரசனை நோக்கி "அரசர்தலைவ, நாங்கள் அப்படியே திருநகரலங்கரித்தல் முதலான காரியங்களை விரைந்து முடிக்கின்றோம்" என்றுரைத்து அவனிடம் விடைபெற்றுக்கொண்டு அகமகிழ்ச்சியுடன் தத்தம் வீடுகள் சென்றார்கள்.

அவ்வளகாபுரியின் வெளிப்புறத்தே ஏழைக்குடிகளின் குடிசைகள் நிறைந்த ஓர் சேரியிருந்தது. அதில ஓர் குடியானவன் இருந்தான். அவன் மிகுந்த ஏழை. ஆனால் அவன் சுசீலன் என்னும் தன் பேருக்குத்தக்கபடி நல்லொழுக்கமுடையவன். தப்புத்தண்டாக்களில் தலையிடமாட்டான். பொய், கொலைமுதலிய குற்றமுடையார்கள் வழியில் அடியெடுத்து வைக்கவும்மாட்டான். உள்ள சொற்பச்சொத்துச் சுதந்தரங்களைக்கொண்டு உபாய காலக்ஷேபஞ் செய்துகொண்டு வந்தான். அவனுக்குப் பெருந்திருவாம்பிகை என்று ஓர் புத்திரி இருந்தாள். அவள் சற்குணமும், சவுந்தரியமும் பொருந்தியவள். சோம்பல், பெருந்தீனி முதலியவை சொற்பமுங்கூட அவளிடத்திலே கிடையாது. சுசீலன் ஏழையாக இருந்தாலும் விவேகியாக இருந்தமையால் பெருந்திருவாம்பிகையின் கல்வி விஷயத்தில் அதிகமாகக் கருத்தைச் செலுத்தியிருந்தான். அவளும் கல்வியில் தேர்ந்திருந்தாள். கல்வியென்றால் எழுதப்படிக்கத் தெரிந்தமட்டில் போதுமென்று திருப்தியடைந்து இறுமாந்திருக்கும் கல்வியல்ல. அக்கல்வியால் அறிவுக்கு என்ன விருத்தியுண்டு? பெருந்திருவாம்பிகையின் கல்வி அப்படிப்பட்டதல்ல, அறிவைவிருத்தியாக்கும் தரத்தக்கதாகவே இருந்தது. சிறந்த நீதிநூல்களையும் புராண இதிகாசங்களையும் தன் பிதாவினிடத்தில் ஐயந்திரிபறக்கற்று நல்லொழுக்கமுடையவளாக இருந்தாள். சில பெண்கள் படிப்பதென்றால் எப்போதும் அதுவே காரியமாக இருந்துவீட்டு வேலை ஒன்றும் கவனியார்கள். பெருந்திருவாம்பிகையோ அப்படிப்பட்டவளல்ல. சமைத்தல் முதலிய வீட்டுக்காரியங்களில் அதிக கெட்டிக்காரி, பெருந்திருவாம்பிகை குழந்தையாக இருந்தபோதே அவளுடைய தாயார் இறந்துபோய்விட்டாள். அப்படியிருந்தும் இவள் தன் தகப்பனுடைய வளர்ப்பிலேயே வீட்டுக்காரியங்

களிலும் கெட்டிக்காரியாக ஆனது அதிக ஆச்சரியமென்று எல்லாரும் சொல்லுவார்கள். அவள் நாடோறும் அதிகாலையில் எழுந்து காலைக்கடன்களை முடித்துக்கொண்டு வீடுவாசல்களைப் பெருக்கி மெழுகிக் கோலமிட்டு விட்டுக் குடத்தை எடுத்துக்கொண்டு ஆற்றிற்குப்போய் ஆடைதோய்த்துக் குளித்துவிட்டுக் கடவுளைக் கைதொழுது தண்ணீர் மொண்டுகொண்டு வீடுவந்து சமைப்பாள். சமைத்துத் தன் தகப்பனுக்குப் படைத்து அவன் உண்டபின் தானும்உண்பாள். உண்டபின் தகப்பனுக்குதவியாகத் தோட்டத்திலோ வீட்டிலோ வேலைசெய்துகொண்டிருப்பாள். ஒழிந்த நேரத்தில் உட்கார்ந்து ஏதாவது பக்தசரித்திரங்களை அல்லது நீதிநூல்களைப் படித்துக்கொண்டாவது தன் தந்தைகூறும் உபதேசமொழிகளைக் கேட்டுக்கொண்டாவது இருப்பாள். மற்ற பெண்களைப்போல உதித்தைந்து நாழிகைக்கெழுந்து அண்டையயல் வீடுகளிற் சென்று வீண்வார்த்தைகளைப் பேசிவிட்டு ஆக்கியசோற்றுக்காளாகவந்து தின்றுவிட்டுக் காலைநீட்டிக்கொண்டு தூங்கமாட்டாள். தந்தையின் நிலைமைக்கேற்றபடி உண்ணச்சோறும் உடுக்கத்துணியும் உள்ள அளவில் போதுமென்று திருப்தியடைந்திருப்பதேயன்றிப் பட்டும் பணியும் வேண்டுமென்று கேளாள், இல்லையென்ற ஏக்கமும் கிடையாது.

அரசனாகிய இராஜசேகரன் சுசீலனது வீட்டிற்குச் சென்றிராவிடினும் வேட்டைக்கேகும்போதும் நகர் சோதனைக்காக மறைந்து செல்லும் போதும் பற்பல சமயங்களில் அம்மாதுசிரோமணியாகிய பெருந்திருவாம்பிகையைக் கண்டு அவளுடைய குணாதிசயங்களைக் குறிப்பிட்டிருக்கின்றான். இவளைக் கருத்தில்வைத்துக்கொண்டுதான் இராஜசேகரன் விரைவில் மணம்புரிந்துகொள்ளுவதாகக் குடிகளுக்கு வாக்களித்தான்.

சுதேசநேசன்.

இந்துப்பெண்களின் கல்வியுணர்ச்சி.

ஓர் சம்பாஷணை.

கண் :—இன்னொருபெண்களானால் செய்யவே செய்யாதுதான், அவள் வாய்க்குச் சர்க்கரைதான் குறைவு.

கிரு :—பெருமூச்சுடன் குறுநகைகாட்டி, அம்மா தாங்கள் கூறிய தன்மையே, அவ்வளவு பெரியபாரத்தைக் கடவுளே எனக்களிக்கவில்லையே.

கண் :—கிரிஜா உள்ளது வெளியில்வந்துவிட்டது பார்த்தையா, இந்தக்காலமே இப்படித்தானிருக்கிறது, முளைக்கும்போதே ஆத்தாளற்று, அப்பனற்று, அண்ணனற்று, தம்பியற்று, அக்காளற்று, தங்கையற்று,

அநாதையாக இருக்கும் பிள்ளைக்கே வாழ்க்கைப்படுவேன் இல்லா விட்டால் தீக் குதிப்பேனென்கிறதுகள் பெண்கள். அதற்கேற்றபடி தான் அமைகிறது.

சிரு :—எங்கள் அதிர்ஷ்டம் நல்லதாயிருந்து கோரிக்கை ஈடேறுகிறது. தாங்கள் இன்னந்தான் வியாகூலப்பட்டுபேசினாலும் என்ன பயன்.

கிரி :—கிருபாவதி, பாட்டியம்மாள் யார்ககூறிபேசினார்கள் பார்த்தாயா? எதற்கும் அநுபோகம்வேண்டும். எனக்குவகையாய்சொல்லத் தெரிந்ததா?

கிரு :—கிரிஜா, இதற்குக்கேட்பானேன். "இமிழ்திரைப்பரவைஞாலமேழ மையுடைத்துமாதோ" எனக்கம்பநாட்டாழ்வார் அருளிசசெய்தது பொய்யாகுமா?

கண் :—என்னமோ சொன்னாய் எனக்கென்னதெரிகிறதா, வாய்வார்த் தையா சொன்னால் எனக்குத்தெரியுமன்றி வேறில்லை. எங்கப்பனும் என்னைப்பள்ளிக்கூடத்தில் வைக்கவில்லை, எங்கள் ஆத்துக்காரபிரா மணனும் இந்தக்காலத்துப்பிள்ளைகளைப்போல் யாரிருந்தாலுமில்லா மல் அச்சமற்று அண்டையிலேவைத்துக்கொண்டு இராத்திரிபாடம் சொல்லிக்கொடுத்தவரல்ல.

கிரு :—மன்னியுங்கள். அம்மா பெரியோர்கள் எல்லாம் கம்பர் கூறியது போல் அநுபோகசாலிகளென்றுதான் யானும்புகன்றேன்.

கண் :—நீ யெதையாவது சொல்லிக்கொண்டுபோ எனக்கென்ன காய்த்தா தொங்குகிறது, எங்கள் வீட்டில் நடக்கும் அதிசயங்களைவிடவா?

கிரி :—பாட்டியம்மா உங்கள் மாட்டுப்பெண் சண்பகம் பார்வைக்கு வெகு அடக்கமாயிருக்கிறாளே, எது நீங்கள் சொல்வதைப்பார்த்தால்.

கண் :—ஆமாம், அடக்கந்தான், "பாத்தாபசுப்போல பாய்ந்தால் புலி போல." என்னும் பழமொழி தெரியாதா.

கிரி :—ஆம் ஆம், இந்தப்பூனையுமிந்தப்பாலைக்குடிக்குமாவென மசமசவெ ன்று இருப்பவர்களை நம்பக்கூடாதுதான்.

கண் :—அவளென்னசெய்வாள். கொண்டவன்பலமிருந்தால் குப்பையே றிச் சண்டைசெய்யத்தடையென்ன.

கிரி :—நூறுபலமிருந்தாலும், கொஞ்சம் அத்துவேண்டாமா.

கண் :—அந்த வயிற்றெரிச்சல் என்னத்திற்குக்கேழ்க்கிறாய், நினையாமலே யிருந்துவிட்டால் ஒரே நிம்மதி.

கிரி :—பேத்தி ஓயாமல்வாசிக்கிறாப்போலிருக்கிறதே.

கண் :—எனக்கேன் அது பேத்தியாகிறது, என்பேத்திமார், இப்படி முப்பது நாழியும் புஸ்தகமும் கையுமாய்நின்றால் என்பெண்வெறுமனேயிருக்கமாட்டாள். இந்தச்செல்லமெல்லாம் நடவாது, இதுபடித்துத்தான் உத்தியோகம்செய்யப்போகிறது, அல்லது ராணிக்குப்பிறகு பட்டமாளப்போகிறது. இல்லாவிட்டால் புக்காத்தில் இரட்டைப்பரிசாரகன்வைத்து வேலைநடக்கப்போகிறது. எல்லாம் நாலுநாளையில் வெளிக்குவரும் பாரேன்.

கிரி :—இடம் எங்காவது பிரஸ்தாபமுண்டோ.

கண் :—இடமா? மடந்தான் கட்டவேண்டும் அல்லது கோவிலுக்குப்பொட்டுகெட்டிவிடவேண்டும். இந்தவீம்புக்கும் விண்ணாணத்திற்கும் எவன் வரக்காத்திருக்கிறான், தப்பிவந்துவிட்டால் அவன் மக்கள் மனிதரை ஓட்டி ஸ்நானம் செய்துவிட்டு, அம்மாளுக்கு பரிசாரகமும்பண்ணி சுயம்பாகியுத்தியோகமும் செய்யவேண்டும்.

கிரி:—என் பாட்டி இப்படியெல்லாம் கபடமாய்ப் பேசுகிறீர்கள். கடைசியில் எல்லாம் உங்கள் பேரனுக்குத்தான் கொடுக்கப்போகிறதாம்

கண்:—ஆம் ஆம், அதுதான்குறைவு. நான்பட்டசுகம் போராது என்பெண்ணிற்கும் வேணும், இந்த மேட்டிமைக்கு அவளா மனுஷி, அவள் பிள்ளை படிக்காவிட்டாலும் எட்டிடத்திலிருந்து நான் நீ யென்று பெண் கொடுக்கவருகிறார்கள். பெண்களோ காரியங்கப்பலாய்செய்கிறதாம், என் மாப்பிள்ளை போய்பார்த்துவிட்டுக் கூடவந்தார். கழிந்த சனியைக் காலில் கட்டினாளாமென்ற விதிஎன்னத்திற்கு ?

கிரி :—மற்றது நாளைக்குப் பேசிக்கொள்ளுவோம், நான் வந்து நேரமாகிறது, வீட்டுப்பாடுகள் வேண்டியமட்டுமிருக்கிறது, போய் வருகிறேன், கிருபாவதி என்னிடத்திற்குப் பதிலாக காந்தியம்மாள் வருகிறார்கள், நான் வந்ததில் உன் படிப்பிற்கு இடையூறாகவிருந்திருக்கும்.

கிரு:—அப்படி யொன்றுமில்லை போய்வா, "காதி விளையாடி யிருகைவீசி வந்தாலுந் தாதிமன நீர்க்குடத்தே தான்" என்று பழமொழியுண்டு.

கிரு:—காந்தியம்மா வரலாமே உட்காருங்கள், ஏது நெடுநாளாய்விட்டது?

காந்:—அம்மா நல்லோரைக்கண்டு நேசிக்க நேரமேது, எனது காலமெல்லாம் குடும்பமென்னும் இடும்பையுட்கழிப்பதாகவே முடிந்தது.

கிரு:—உண்மையே. ஆயினும் "அறத்தாற்றினில் வாழ்க்கையாற்றிற்-புறத்தாற்றிற்போ ஒய்ப்பெறுவதெவன்" என "எவற்றினுமாண்புடைத்து இல்லறமேயெனும்" பொருள்படக்கூறினர் முன்னோராதலின் இல்லறந்தீதென விகழ்தல் பொருந்துமோ ?

காந்:—மற்று தங்கள், கருத்து இல்லறமே சிறந்த தென்பதோ ?

கிரு:—அம்மா, கிரமப்படி ஒழுகினல் எவ்வறமுஞ்சிறந்தது தான். மனம் ஒருவழிப்படின் எத்துறையிலிருந்தாலென்ன ?

சாந்:—தாங்கள் இப்படிச்சொல்வது தம்மைப்போலும் மேதாவிகட்குமட்டில் இயல்பேயன்றி என்போலும் அற்ப கல்வியுடையோர்களுக்கு இயல்பாகுமோ? உதாரணமாக 1 வாரமாகத் தாங்கள் எனக்குக் குறித்துக்கொடுத்த பாகங்களைப் படிக்கப் பிரயத்தினம். ஒவ்வொரு தினத்திலும் யாராவது வந்து வீண்பேச்சுகள்வளர்த்தி ஊக்கத்தைக் கெடுக்கின்றனர்கள். இது தப்பினுலும் எங்கே புருஷர்கள் வந்துவிடுகிறார்களோ என்பது பெருந்திகிலாயிருக்கிறது. இவ்வித இடையூறுகள் சம்சாரமென வொன்று இல்லாவிட்டால் நேராதன்றோ ?

(இன்னும் வரும்.)

அசலாம்பிகை யம்மாள்.

கற்பு.

"தும்பிக்கையானிடம் நம்பிக்கைகொள்"

காப்பு.

ஓரானைக்கன்றை உமையாள் திருமகனைப்
பேரானகற்பகத்தைப் பேணினல்-வாராத
புத்திவரும் வித்தைவரும் புத்திரசம்பத்து வரும்
சத்திவரும் சித்திதரும் தான்.

இதை வாசிக்கும் சகோதரிகாள்! நான் கற்பைப்பற்றி ஒரு நிரூபம் எழுதுகிறேன். இதைக் கவனித்து வாசிப்பீர்களாக. கற்பென்பதென்னவெனில்: நாம் சிறு பிராயத்தில் தாய் தகப்பன்மார்களுக்கு அடங்கி நற்குணங்களிலும், நன்மார்க்கத்திலும் சிறந்து, பிற்பாடு கணவனிடம் சென்று, அவருக்குப் பிரியமாய் நடந்துகொள்வதே. அதாவது:—"கொழுநனுண்டபின் தானுகர் கொள்கையும், விழிதுயின்றபின் துஞ்சலுமென்துயில், எழுதல்முன்ன மெழுதலுமேயன்றோ, பழுதில் கற்புடைப்பாவையர் செய்கையே" என்றபடி நமது கணவர் போஜனம் செய்தபிறகு நாம் உண்பதும், அவர் தூங்கினபின் தூங்கி, அவர் எழுமுன் எழுந்து, நாம் செய்யவேண்டிய நித்திய கடன்களை முடித்துக்கொண்டு, படுக்கையிலிருக்கும் நமது நாயகர் எழுந்தவுடன் அவருக்குச் செய்யவேண்டிய உபசாரங்களைச் சோம்பலின்றி அதிஜாக்கிரதையுடன் செய்யவேண்டியது. அப்படிச் செய்

துவருவதினால் நம்மேல் நம்முடைய நாயகர்க்கு அதிக பிரீதியுண்டாகின்றது. சிலர் இப்படிச்செய்யாமல் சோம்பேறித்தனத்தைக் காட்டுவதினால், புருஷர்களுக்குச் சிலவேளைகளில் கோபத்தை உண்டாக்கி, அவர்கள் திட்டுவதற்கும், அடிப்பதற்கும் இடந்தேடிக்கொள்ளுகிறார்கள். நாமும் அப்படிச்செய்தால், நமக்கும் அவர்க்கும் உள்ள பிரியம் தப்பிப்போய் விடும். நமக்கு அவரைவிட தெய்வம் வேறில்லை. நமக்கு கணவரேகதி அவரேநிதி. நமக்குப் பார்த்தாவுடன் கூடிவாழ்வதே பரமசந்தோஷம். பர்த்தாவிருக்குமிடம் காடாயிருந்தாலும் நாடு. அவரில்லாத விடம் நாடாயிருந்தாலும் காடு. அவருடைய பட்சமே நமக்கு லக்ஷம். நமக்கு என்ன துன்பம் வந்தாலும் அவருடைய கிருபாநோக்கம் பட்டால் நம்முடைய கஷ்டமெல்லாம், சூரியனைக்கண்ட பனிபோலும், ஒளியைக்கண்ட இருள்போலும், விஞ்ஞானத்தைக்கண்ட அஞ்ஞானம்போலும் வெளியாகும். ஆகையால் அவருடைய மனதிலிருக்கும் விஷயங்களை முகக்குறியினால் அறிந்து செய்வதே நம்முடைய விரதமாகும். "கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி, கொண்டன செய்வகைசெய்வான் தவசி, கொடிதொரீஇ, நல்லவை செய்வான் அரசன், இம்மூவர் பெய்யெனப் பெய்யுமழை" என்று பலவாறாய் நூற்களும்புகழ்ந்து கூறியிருக்கின்றன. இதன் பொருள் யாதெனில் தன்னைக்கொண்ட கணவருடைய குறிப்பையறிந்து அவரை உபசரித்து நடப்பவள்தான் மனைவியாவாள்; தான் மேற்கொண்ட விரதங்களை விதிப்படி செய்பவன்தான் தபசி, கெடுதியுண்டாகும் காரியங்களைத் தள்ளி நன்மைகளை யுண்டாக்குவோன்தான் அரசன், இந்த நற்செய்கைகளையுடைய இம் மூவரும் அவர்கள் வாக்கால் பெய்யென்று சொன்ன மாத்திரத்தில் மழைபெய்யும்.

ஆகையால் நாம் தினந்தோறும் கணவருக்குச் செய்யும் உபசாரங்களை வளர்பிறைபோல ஜாஸ்தியாக்கி மிகுந்த ஜாக்கிரதையுடன் செய்துவர வேண்டும்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும், தெய்வத்துள் வைக்கப்படும்" என்று திருவள்ளுவரும் அருளியிருக்கின்றார். இதன் கருத்தென்னவென்றால்:—இப்பூமியின்கண் இல்லறத்தோடுகூடி வாழ வேண்டிய முறைமைப்படி வாழ்பவன், உலகத்தில் பிறந்த மனிதனாயிருந்தபோதிலும், தேவ உலகத்தில் வசிக்கும் தேவருள் ஒருவனாக மதிக்கப்படுகிறான். ஓ அன்பார்ந்த தோழிகாள்! இல்லறத்தில் புருஷர்களுக்கு, இவ்வித சிறந்தபேறு உண்டாவதற்குக்காரணம் நல்லொழுக்கமுள்ள மனைவியாலல்லவா? ஆகையால் நாம் இவ்வில்வாழ்க்கையின் விதிகளைச் சரியாய்க்

கற்றறிந்து, அதன்படி கிரமமாய் சன்மார்க்கத்தில் நடந்து, மேலே சொன்னபடி நமது கணவரை மேன்மைப்படுத்தி, அதனால் நாமும் மேன்மைப் படலாம்; அப்படிக்கில்லாமல், அவரொன்றுசொல்ல நாமொன்று செய்து அவருடைய மனதை நோகும்படி செய்தால் நாம் பெரும்பிழை செய்தவர்களாவோம். "உடன்பாடிலாத மனைவிதொழிலின்று" என்றபடி கணவனுக்கு, அதிக துன்பத்தைத் தருவதாகும். அப்படிக்கில்லாமல் பதிவிரதா தர்மத்தைக் காப்பாற்றுவதற்கும், நல்லஸ்திரீ என்று பெயரெடுப்பதற்கும் கல்வி முக்கிய சாதனமாயிருக்கின்றது. சில புருஷர்கள் பெண்களுக்கு கல்வி கற்பிக்கக்கூடாதென்று பிடிவாதம் செய்கிறார்கள். கல்வி கல்லாததினால் வந்த முட்டாள் தனத்தைப்பற்றி ஒரு சிறுகதை சொல்லுகிறேன். கல்வி கல்லாத ஒரு ஸ்திரீக்குக் கணவனாய் வாய்த்த ஒரு கவிராயன், தான் ஒரு அரசனிடம் குதிரை பரிசுபெற்று தன் இல்லத்திற்கு வந்தவுடன் மனைவி தன் புருஷனை க்ஷேமம் விசாரித்ததும், அவன் அதற்குத் தான் வாங்கிக்கொண்டு வந்த பரிசு குதிரையென்று சொல்லாமல் வேறு விதமாக விடைகொடுத்ததும், அதற்குத்தான் தெரியாது விழித்ததாகவும், தன் தோழியிடம் சொன்னதாவது:—சுந்தரியே புறமேகிவந்த துணைவரை நோக்கிச் சுபமென்னென்றேன், வந்ததோ ரசுவமென்றார் கோரமென்றார்; மயங்கி நின்றேன் மாமாவென்றார், நொந்தழுதேன் பலர் மொய்த்தார் வாசியெனத் தேறினேனுவன்றயாவும், அந்த முறுங்குதிரை யெனச் சொலிச் சினந்தார் நாணமிகுந்தஞ்சினேனே" என்று சொன்னது கல்விகல்லாததினால் வந்த அவமானமல்லவா? ஆகையால் நாம்கல்விகற்று நம் **மாதர்மனோரஞ்சனி** முதலாகிய பத்திரிகைகளையும் படித்து நமது பதிவிரதாதர்மத்தை விருத்திசெய்வோமாக. நாம் நமது கணவரிடத்தில் நடந்து கொள்ளவேண்டிய முறைமை என்னவென்றால்; "அன்னை தயையும் அடியாள் பணியுமலர்ப் பொன்னினழகும் புவிப்பொறையும்-வன்னவுடல், வேசிதுயிலும் விரல் மந்திரி மதியும், பேசிலிவையுடையாள் பெண்" என்றபடி மேற்சொல்லிய சகலவித குணங்களும் நம்மிடத்தில் குடிகொண்டிருக்கவேண்டியது அவசியம். மேலும் நமது கணவரிடம் நாம் பயபக்தி விநய விசுவாசத்துடனும், அதிக ஒற்றுமையுடனும், இருக்கவேண்டியது.

"அன்பும் அறனும் உடைத்தாயி னில்வாழ்க்கை, பண்பும் பயனுமது" என்று திருவள்ளுவநாயனார் சொல்லியிருக்கிறபடி இல்வாழ்க்கையின் குணமும், அதின் பலனும் என்னவென்றால் கணவனும் மனைவியும் அந்நியோந்நியமாய் ஒருவர்க்கொருவர் மனவொற்றுமையுடன் வாழ்தலே அதன் குணமும், அவ்வொற்றுமையோடுகூடிசெய்யும் தருமங்களே அவ்வில்வாழ்க்கையின் பலனுமாகும். லக்ஷ்மி அம்மாள்.

பாகசாஸ்திரம்.

Specially Contributed to our Magazine by Mr. T. K. Ramachandra Rao, *author of the Hindu Pakasastra.*

பால்கோவா குல்குலே (1).

சீனிச்சர்க்கரை—அரை ($\frac{1}{2}$) வீசை, **துங்குமப்பூ**—அரைக்கால் ($\frac{1}{8}$) ரூ. எடை—இவ்விரண்டையுங்கொண்டு* இளம்பாகாக்கி (ஜிலேபிப்பாகு) வைத்துக்கொண்டு, உடனே

பன்னீர்—வீசம் ($\frac{1}{16}$) படி, **கஸ்தூரி**—ஆறு (6) கு. எடை—இவைகளில் கஸ்தூரியைப் பன்னீரிற் கரைத்துத் தயாராக்கிவைத்திருக்கும் சர்க்கரைப்பாகிற் கொட்டிக் கலந்துகொடுத்து வைத்துக்கொள்ளவேண்டியது.

வாதுமைப்பருப்பு—இரண்டு (2) பலம்—வாதுமைவிரைகளை ஜலத்தில் ஊறவைத்திருந்து அதன் சிவப்புத்தோலைப் போக்கிச் சிறுதுளாய் (அரிசிபோல்) நறுக்கி வைத்துக்கொண்டு பின்பு,

*__பால்கோவா__—ஐந்து (5) பலம், †**கோதுமைஸத்து** ஒரு (1) பலம்—இவ்விரண்டையும் ஒன்றாய்க்கலந்து நன்றாய் மர்த்தித்து நெல்லிக்காயளவு உருண்டைகளாக்கி, ஒவ்வொரு உருண்டையையும் கொஞ்சம் கிண்ணம்போலாக்கி அதில் ஒவ்வொன்றிலும் தூளாக்கிவைத்திருக்கும் வாதுமைப்பருப்பை நிரப்பி அக்கிண்ணத்தின் ஓரங்களைச்சுருக்க உண்டையாக்கி அதாவது மோதகத்தைப் போலாக்கிவைத்துக் கொண்டு,

நெய்—கால் ($\frac{1}{4}$) வீசை—இதை ஓர் வாணலியில்விட்டுக் காய்ச்சி அதில் மேற்கண்ட உருண்டைகளை போட்டுப் பக்குவமாய்க் கொஞ்சம் சிவக்கும்படி வேகவைத்துப் பின்பு அதை தயாராக்கிய பாகிற்போட்டு நன்றாய் ஊறியபின் எடுத்து உபயோகிக்கவேண்டியது.

---

* இதன் விவரத்தை " இந்துபாக சாஸ்திரத்தில் 126-வது பக்கத்தில் காண்க.

* இதன்விவரத்தை இ. பாகசாஸ்திரம் 358வது பக்கத்தில் காண்க. இதற்குத்திரட்டுப்பால் என்றும் பெயர்.

† கொஞ்சம் கோதுமை சொப்பை ஜலத்தில் நன்றாய் ஊறவைத்திருந்து கசக்கிப்பிழிந்து சத்தை எடுத்து அதை மறுபடியும் ஜலத்தைவிட்டுக் கசக்கி பிழிந்து அதில் பிசின்போன்ற சத்தில்லாமல் செய்து எறிந்துவிட்டு சத்தோடுகூடிய ஜலத்தை தெளியவைத்திருந்து அத்தெளிவை வடித்துவிட்டு அடிவண்டலாகிய சத்தை உபயோகிக்கவேண்டியது இதற்கே கோதுமை சொப்பு சத்தென்றபெயர்.

இந்துக்களின் சாப்பாடு.

நமது இந்து தேசம் அன்னியருடைய துரைத்தனத்துக்குள்ளான காலம் முதற்கொண்டு நம்முடைய நடை, உடை, பாவனைகள் கொஞ்சங் கொஞ்சமாய் மாறிக்கொண்டு வருகின்றன என்பது எல்லாருக்குந்தெரிந்த விஷயமே. இத்தேசத்தில் வெகுகாலமாய் வழங்கிவந்த நடை, உடை, பாவனை ஏற்பாடுகளை விட்டு துரைத்தனம் செய்யும் ஜாதியாருடைய நடை, உடை, பாவனைகளையே அனுசரிப்பது இக்காலத்தில் வெகு சாதாரணமாய் விட்டது. இவ்விதமான மாறுபாடுகளினால் நன்மைதான் விளையுமோ தீமை விளையுமோ என்பதை ஆராய்ச்சி செய்ய இது சமயமல்ல. மற்றொருசமயத்தில் விவரிப்போம். மேல்கண்ட மாறுபாடுகள் நம்முடைய சமையல் அறையையும் எட்டிப்பார்க்கின்றன. சில விடங்களில் உள்ளேயும் பிரவேசித்து விட்டன. உதாரணம்:—(1) தரையில் அல்லது மணையில் உட்கார்ந்துகொண்டு இலையில் சாப்பிடும் வழக்கத்தைவிட்டு மேஜைகளின்பேரில் பீங்கான் தட்டுகளில் சாப்பிடவிரும்பல் (2) காலைமாலையில் வீட்டில் பாகஞ்செய்யும் ஆகாரமன்னியில் சீமையிலிருந்து டப்பிகளில் அதிகவிலைக்கு விற்கப்படும் பிஸ்கூத்முதலியவற்றை விரும்பல் (3) வெயிற்காலத்தில், இரண்டு நெல்லிக்காய் ஊறுகாயை சாப்பிட்டு பானையில்விட்ட குளிர்ந்த ஜலத்தை பானம் செய்தால் தாகம் தீருவது பழைய ஏற்பாடாய்ப் போய்விட்டது. புது ஏற்பாட்டின்படி புட்டி ஒன்று இரண்டு அணு விலையுள்ள சோடா, லெமனெட்டு இவைகளுடன் பனிக்கட்டி கலந்து குடித்தாலொழிய தாகந்தீருவதில்லை. (4) மற்றுஞ் சிலர், வெள்ளைக்காரர்கள் உபயோகிக்கும், ஆப்காரி டிபார்டுமெண்டைச் சேர்ந்த பானங்களையும் வெயிற்காலத்தில் குளிர்ச்சியுண்டாக்கவும் குளிர்காலத்தில் உஷ்ணத்தையுண்டாக்கவும் உட்கொள்ளுகிறார்கள். பழைய ஏற்பாடுகளெல்லாம் சிலாக்கியமென்றும், புதியவைகளெல்லாம் கெட்டவைகள் என்பதும் நமது நோக்கமல்ல. ஆனால் பழையவழக்கங்களில் நல்லவைகளை நீக்கி அன்னியர்களுடைய வழக்கங்களில் கெட்டவைகளை அனுசரிப்பது நமது தேசத்துக்குப் பலவிதமாய் நஷ்டம் என்பதற்கு சந்தேகமில்லை.

சாப்பாட்டுவிஷயமாய், முற்கூறிய மாறுபாடு நடப்பதற்கு வெகு காரணங்கள் உண்டு. அதிக ஐசுவரியமில்லாத ஹிந்து குடும்பங்களில் பெண்பிள்ளைகளேசமையல் செய்வதுவழக்கம். பெரிய பெண்பிள்ளைகள் செய்வதை சிறியபெண்கள் நாளாவர்த்தியில பார்த்துதாங்களும் கற்றுக்கொள்வது நமக்குள் வழக்கம். சிலநாள் தாயார்வீட்டிலும் சிலநாள் மாமியார்வீட்டிலும்

இச்சமையல் தொழிலில் பயிற்சி அடைந்துவந்தார்கள். இக்காலத்தில், தாயார் வீட்டிலிருக்கும்போது சுமார் 4 அல்லது 5 வயது முதல் பாலிகாபாடசாலைகளில் சேர்ந்துவித்தியா விஷயமாய் கவனம் செலுத்தவேண்டியிருக்கிறபடியால் சமையல்முதலிய வீட்டுவேலைகளில் தேர்ச்சியடைய ஏதுவில்லை. பாலிகாபாடசாலைகளிலோ, வாசிப்பு, எழுத்து, கணிதம், சரித்திரம், பூகோளம் முதலிய பாடங்களை கற்றுக்கொடுக்கிறார்கள். ஆனால் பெண்களுக்கு மேற்கூறிய விஷயங்களைக்காட்டிலும் அதிக அவசியமும் முக்கியமுமான சமையல்தொழில், நாடோடி வைத்தியம், ஆகிய இவ்விஷயங்களில் தேர்ச்சியுண்டாக இப்போது யாதொருமார்க்கமுமில்லை. பெண்கள் பெரியவர்களாய் தங்கள் புருஷர்கள் வீட்டைச் சேர்ந்தவுடனே, அவர்கள் உத்தியோகம் செய்யுமிடத்திற்குப் போய்த் தனியாய் தாயார் மாமியார் முதலிய பெரியோர்கள் சகாயமின்றி குடித்தனம் செய்யும்படியாய் சம்பவிக்கிறது. இப்பேர்ப்பட்ட குடும்பங்களுக்கு அதிக உபயோகமாகும்படியாய் சேலம் கவர்ன்மெண்டு அச்சாபீஸிலுள்ள ம-ா-ா-ஸ்ரீ தோ. கி. இராமசந்திர ராயர் இந்து பாக சாஸ்திரம் ஒன்று தமிழில் எழுதியிருக்கிறார். அது மிகவும் உபயோகமான புஸ்தகம். தமிழில் இவ்விஷயமாய் ஒரு புஸ்தகமும் எழுதப்படவில்லை. விசேஷமாய் தமிழில் கதைப்புத்தகங்களும், மற்ற பாஷைகளிலுள்ள கதைகளின் மொழி பெயர்ப்புகளும், மதசம்பந்தமானவைகளும், பலவித பாடல் புஸ்தகங்களுந்தான் அதிகமாயிருக்கின்றன. ஆனால ஆங்கிலேய பாஷையிலோ எல்லா விஷயங்களைப்பற்றியும் புஸ்தகங்களிருக்கின்றன. நமது தினசரி கிரககிருத்திய விஷயமாய் அதிக உபயோகமான இந்து பாகசாஸ்திரத்தை அவர் எழுதியது தமிழ் வாசிப்போர்களுக்கெல்லாம் ஒரு பேர் உதவியென்று எண்ணுகிறோம். தமிழருக்குள் மாத்திரம் வழங்கிவரும் சாப்பாடு தேகத்துக்கு அவ்வளவாய் பலந்தரத்தக்கவைகளல்ல, வட இந்தியாவில் உள்ள மகாராஷ்டிரர் முதலியவர்களுடைய சாப்பாடு அதிக பலமானது. இராமச்சந்திர ராயருடைய பாகசாஸ்திரத்தில், ஆந்திர, திராவிட, கர்னடக, மகாராஷ்டிரருக்குள், எளியவர்கள் தினந்தோறும் சாப்பிடும், கீரை குழம்பு முதலாக தனிகர்கள் புசிக்கும் பேணி, லாடு, மண்டிகை முதலிய நாகரீக போஜனங்களையும், கலியாணம் முதலிய விசேஷதினங்களில் செய்யும் பற்பல போஜன பதார்த்தங்களையும் செய்யும் வகையை லேசான சாதாரண தமிழில் விவரித்திருக்கிறார்.

மனிதர்கள் இவ்வுலகத்தில் அனுபவிக்கும் இன்பங்களில், குற்றமற்றதும், இன்றியமையாததுமானது நல்லுணவு. இந்நல்லுணவை அநேக பெண்கள் செய்யமுடியாமல் விழிப்பதும் தெரிந்த விஷயமே, மேலும்

தனவந்தர்களுடையபெண்கள் தங்கள் சமையல்செய்பவன் வீண்செலவு செய்யாமலும், தினசரிக்குவேண்டியமட்டும் ருசியாயும் திட்டமாயும் சமையல் செய்யும்படி அவனுக்கு உத்திரவளிக்கக்கூடும். ஆகையால் இப்பேர்ப்பட்ட விஷயமாய், தமிழ்பாஷையில் இதுவரையிலுமில்லாத (சுமார் 404 பக்கங்களும் 100 சித்திரப்படங்களுமுள்ள) இப்புத்தகம் ஒவ்வொரு ஹிந்து குடும்பத்துக்கும் இன்றியமையாதது என்பது நமது அபிப்பிராயம். முதற் பதிப்பின்2000 பிரதிகளும் செலவாகி இரண்டாம் பதிப்பின் பிரதிகளும் அதிகவிரைவாய் விற்கிரயமாகிறது என்பதே நம்மபிப்பிராயத்திற்கு ருஜு. இப்புத்தகம் வைஜயந்தி அச்சுக்கூடத்தில் நல்ல காகிதத்தில் வெகு நேர்த்தியாய் அச்சிடப்பட்டிருக்கிறதைப்பற்றியும் மிகசந்தோஷப்படுகிறோம்.

விடுகதைகள்.

1. அக்கரைக்கும் இக்கரைக்கும் கால்நாட்டி, அழகானசங்கிலி மேற் பூட்டி, வெள்ளிச்சங்கிலி படம் எடுத்தால் எரு நாழிகைக்குள், தேரோட்டம்.

2. செங்கக்கட்டு நந்தவனக்கொல்லை, அவளுக்கு ஆறுமாதப்பிள்ளை, அவளைத்தொடுவாருமில்லை.

3. சென்னபட்டணம் சிவப்பு, சீரங்கபட்டணம் கருப்பு உடைச்செடுத்தாற் பருப்பு வாயிற் போட்டாற் கசப்பு.

4. செக்க சிவந்திருக்கும், செங்காஞ்சிபோலிருக்கும், வால்நீண்டிருக்கும், வந்திருக்கும் சந்தையிலே.

காந்திமதியம்மாள்.

[விடுகதைகளை எழுதியனுப்புகிறவர்கள் இனி அவைகளுக்கு விடைகளையும் அவைகளுடன் எழுதியனுப்பவேண்டும்; அப்படி விடையில்லாத விடுகதைகள் இனி பிரசுரிக்கப்படமாட்டாது.

மாயாபுரி விநோதக்கதை, விம்பலேன், ஆண்டாள் அம்மாள் சரித்திரம் முதலியவைகள் அடுத்த சஞ்சிகையில் வரும்.—ப. ர்.]

பத்திராதிபர் அசௌக்கியமாயிருந்தமையாலும வேறுவீட்டிற்கு ஆபீஸைமாற்றினமையாலும் இம்மாதத்தியசஞ்சிகை வெளிவரதாமதமாயிற்று. இதைப்பற்றி பத்திராதிபரே மிகவருத்தப்படுகிறார்.—மானேஜர்.